காலைக்கதிர் (06.07.2025)

# திருக்காடுதுறையில் இலவச கோமாரி தடுப்பூசி முகாம்

**கரூர், ஜூலை 6**

கரூர் மாவட்டம், திருக்காடுதுறையில், தமிழ்நாடு செய்திதாள் காகித ஆலை நிறுவனம், மாவட்ட கால் நடை பராமரிப்புத் துறை சார்பில், இலவச கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது.

நிறுவனத்தின் முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் தலைமை வகித்தார். நொய்யல், நடந்தை கால்நடை மருத்துவமனைகளின் டாக்டர் தமிழரசன், உஷா, அசோக் குமார் ஆகியோர் தலைமையிலான மருத்துவ குழுவினரால் நொய்யல், மறவாபாளையம், சேமங்கி, முத்தனூர், புங்கோடை குளத்துப்பாளையம், புங்கோடை காளிபாளையம் உள்ளிட்ட, 20 கிராமங்களை சேர்ந்த, 200க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப் பட்டது. மேலும், கால் நடைகளுக்கு ஊட்டச்சத்து மாவு இலவசமாக வழங்கப் பட்டது.



■ கரூர் மாவட்டம், திருக்காடுதுறையில் தமிழ்நாடு செய்திதாள் காகித ஆலை நிறுவனம் சார்பில் நடந்த, இலவச கோமாரி நோய் தடுப்பூசி முகாமில், பயனாளிக்கு கால்நடை ஊட்டச்சத்து மாவு பாக்கெட்டை, முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் வழங்கினார்.

தினமலர் 09.07.2025

# கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

**வேலாயுதம்பாளையம், ஜூலை 9–**

தமிழ்நாடு அரசின் கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ் 7வது சுற்று தீவிர கோமாரி நோய் தடுப்பூசி முகாம் கரூர் மாவட்டத்தில் நடை பெற்று வருகிறது.

இத்திட்டம் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தமது சமுதாய நலத்திட்டப்பணிகளில் ஒரு பகுதியாக, கரூர் மண்டல இணை இயக்குனர் சாந்தி மற்றும் கோட்ட உதவி இயக்குனர் உமா சங்கர் ஆகியோர் ஒப்புதலுடன் நொய்யல் கால்நடை மருந்தகத்துடன் இணைந்து 5 நாட்கள் 20 கிராமங்களில் இலவச நடமாடும் கோமாரி நோய் தடுப்பூசி முகாமை நடத்தியது.

திருக்காடுதுறையில் நடந்த முகாமை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார், கால்நடைகளுக்கான ஊட்டச்சத்து மாவு வழங்கி துவக்கி வைத்தார். நொய்யல், நடந்தை ஆகிய கால்நடை மருத்துவமனைகளைச் சார்ந்த டாக்டர்கள் தமிழரசன், உஷா மற்றும் அசோக்குமார் ஆகியோர் தலைமையிலான மருத்துவக்குழு நொய்யல், மறவாபாளையம், சேமங்கி, நல்லிக்கோவில் உட்பட 20 கிராமங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடத்தி வருகிறது.

கால்நடைகளுக்கு காகித நிறுவனம் சார்பில் ஊட்டச்சத்து மாவு இலவசமாக வழங்கப்பட்டது.

**தினகரன் (05.07.2025)**

## தமிழ்நாடு காகித ஆலை சார்பில்

# கால்நடைகளுக்கு இலவச கோமாரி நோய் தடுப்பூசி முகாம்



▶ திருக்காடுதுறை கிராமத்தில் நடைபெற்ற முகாமில் காகித நிறுவனத்தின் முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் தொடங்கி வைத்தார். கால்நடை மருத்துக் குழுவினர்கள்.

வேலாயுதம்பாளையம், ஜூலை 5: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் காகிதபுரம் மற்றும் தமிழ்நாடு அரசின் கரூர் மாவட்ட கால்நடைபராமரிப்புத் துறை, இணைந்து பசுவினம் மற்றும் எருமையினங்களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடத்தியது.

தமிழ்நாடு அரசின் கோமாரிநோய்தடுப்பூசித் திட்டத்தின் கீழ் 7வது சுற்று தீவிரகோமாரிநோய்தடுப்பூசி முகாம் கரூர் மாவட்டத்தில்நடைபெற்றுவருகிறது. இத்திட்டம் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைய உதவி செய்யும் வகையில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தமது சமுதாய நலத்திட்டப்பணிகளில் ஒரு பகுதியாககரூர் மண்டலஇணை இயக்குநர் சாந்தி மற்றும் கோட்ட உதவி இயக்குநர் உமாசங்கர் மேற்பார்வையில் நொய்யல், கால்நடை மருந்தகத்துடன் இணைந்து 2.7.2025ம் தேதி முதல் துவங்கி 7.7.2025ம் தேதி வரை 5 நாட்கள் இம்முகாமினை 20 கிராமங்களில் நடத்தி வருகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் முகாமில்கலந்துகொண்டு கால்நடைகளுக்கான ஊட்டச்சத்து மாவினை வழங்கினார். நேற்று திருக்காடுதுறையில் நடந்தகால்நடை முகாமினை துவக்கி வைத்தார். இந்த நடமாடும் கோமாரி நோய் தடுப்பூசி முகாமில் நொய்யல், நடந்தை ஆகிய கால்நடை மருத்துவமனைகளைச் சார்ந்த டாக்டர் தமிழரசன், டாக்டர் உஷா மற்றும் டாக்டர் அசோக்குமார், கால்நடை மருத்துவர்கள் தலைமையிலான மருத்துவக் குழு நொய்யல், மறவாபாளையம், சேமங்கி, முத்தனூர், புங்கோடை குளத்துப்பாளையம். புங்கோடைகாளிபாளையம். வேட்டமங்கலம், வடுகபட்டி, திருக்காடுதுறை, கரைப்பாளையம், ஆலமரத்துமேடு, இளங்கோ நகர், கவுண்டன்புதூர். செட்டிதோட்டம், வடிவேல்நகர், செல்வ நகர், ஓரம்புபாளையம், ஓலப்பாளையம், நல்லிக்கோவில், ஓகே ஆர் நகர் 20கிராமங்களில்கால்நடைகளுக்கு கோமாரி நோய்தடுப்பூசிமுகாம்கள் நடத்த உள்ளது.

டிஎன்பிஎல் நிறுவனம் தமது பங்களிப்பாக மருத்துவ குழுவிற்கு உணவு மற்றும் வாகன வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தும் ஆட்டோ. மற்றும் நோட்டீஸ் மூலம் விளம்பரப்படுத்தியும் கோமாரி தடுப்பூசி முகாமிற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது. மேலும் கால்நடைகளுக்கு காகித நிறுவனத்தின் சார்பில் ஊட்டச்சத்து மாவு இலவசமாக வழங்கப்பட்டது.

தினத்தந்தி (06.07.2025)



### புகளூர் காகித ஆலை சார்பில்

# கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

நொய்யல், ஜூலை.6-

புகளூர் காகித ஆலை, மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் திருக்காடுதுறையில் நடந்த கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாமை காகித ஆலையின் முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் தொடங்கி வைத்து, கால்நடைகளுக்கான ஊட்டச்சத்து மாவினை வழங்கினார். முகாமில் நொய்யல், நடந்தை ஆகிய கால்நடை மருத்துவமனைகளை சேர்ந்த டாக்டர்கள் தமிழரசன், உஷா, அசோக்குமார் ஆகியோர் தலைமையிலான மருத்துவக்குழுவினர் கலந்து கொண்டு நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, வேட்டமங்கலம், திருக்காடுதுறை உள்ளிட்ட 20 கிராமங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியை செலுத்தினர். முகாமில் மருத்துவக்குழுவினருக்கு தேவையான வசதிகளையும், கால்நடைகளுக்கு ஊட்டச்சத்து மாவும் காகித ஆலை சார்பில் வழங்கப்பட்டது.